மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

A Study: The way a Kannada Short Film becomes the Story, the Game, the Koothu and the Stage Drama of Children in the Tamil Context of Elam

Dr. S. Jeyasankar[1], T. Gowrieeswaran[2]

Senior Lecturer[1], Lecturer[2], Department of Fine Arts, Eastern University, SriLanka

Manuscript ID : **MT26A0084**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 19.10.2022
Revised: 20.10.2022
Accepted: 21.10.2022
Published: 26.10.2022

Pages : 17-24

DOI: 10.5281/zenodo.7372238

ABSTRACT:

A Kannada Short film Kiriya played a multiple dimensions in the Tamil context of Elam, as Children's Story named as Kiriya, the form of Vadamodi Children's Koothu named as Malaippalam and a school stage drama named Thalavurupootha. The underpinning concept and thought of gender equality is the reason behind to acquire these multi-dimensional artistic forms. As a voice of the worldwide artistic activism for the elimination of gender discrimination and to establish the equal human life, the Kannada short film Kiriya was created. The purpose of this descriptive study is to find the causes for its multi-dimensional development as the Story, the Game, the Koothu and the Stage Drama of Children in the Tamil Context of Elam.

KEYWORDS:

Patriarchy, Gender, Equality, Theatre Activism

நாட்டிற்கு மழையைக் கொணர்ந்த சிறுமியின் கதையைக் கூறும் கன்னட மொழிக் குறுந்திரைப்படம் தமிழில் சிறுவர் கதையாகி, சிறுவர் விளையாட்டாகி, சிறுவர் கூத்தாகி, மேடை நாடகமாகிய விதம் - ஓர் ஆய்வு

கலாநிதி சி. ஜெயசங்கர்[1], து. கௌரீஸ்வரன்[2]
முதுநிலை விரிவுரையாளர்[1], விரிவுரையாளர்[2],
நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கட்டுரைச் சுருக்கம்

கன்னட மொழியில் வெளிவந்த நாட்டிற்கு மழையைக் கொணர்ந்த சிறுமியின் கதையைக் கூறும் குறுந்திரைப்படம் ஈழத்துத் தமிழ்ச் சூழலில் 'கிரிஜா' என்று சிறுவர் கதையாகவும், 'மழைப்பழம்' என்று வடமோடி சிறுவர் கூத்தாகவும், 'தளவுருப்பூதா' என்ற பெயரில் பாடசாலை நாடகமாகவும் பல்பரிமாணங்களைப் பெற்றிருக்கின்றது. இவ்வாறு இது கலைத்துவப் பரிமாணங்களைப் பெறுவதற்கு அது உட்கொண்டிருந்த பால்நிலைச் சமத்துவச் சிந்தனையே காரணமாகவுள்ளது. பால்நிலைப் பாராபட்சங்களை இல்லாதொழித்து சமத்துவமான மனித வாழ்வியலை உருவாக்குவதற்கான உலகந்தழுவிய கலைச்செயல்வாதத்தின் ஓரம்சமாகவே கன்னடத்தில் கருக்கொண்டு குறுந்திரைப்படமாக உருப்பெற்ற படைப்பாக்கம் ஈழத்தில் கதையாக, கூத்தாக, மேடைநாடகமாக, சிறுவர்களுக்கான விளையாட்டாக பல்பரிமாணங்களைப் பெற்று நிற்கின்றது. இத்தகைய பல்பரிமாணங்கள் எவ்வாறு ஏற்பட்டன என்பதை ஒரு விவரண ஆய்வாக இக்கட்டுரை முன்வைக்கின்றது.

கருச்சொற்கள்

ஆணாதிக்கம், பால்நிலை, சமத்துவம், சிறுவரிலக்கியம், அரங்கச்செயல்வாதம்

முன்னுரை

உலகின் கலை இலக்கிய வரலாற்றில் ஏதோவொரு பண்பாட்டின் யாதாயினும் ஒரு படைப்பாக்கத்தில் கருக்கொள்ளும் கருத்து உலகின் வெவ்வேறு கலை இலக்கியங்கள் வாயிலாக வெவ்வேறு பரிமாணங்களில் வெளிவந்து பரவலாக்கம் பெற்றுள்ளமையினைக் காண முடிகின்றது. உதாரணமாக சுரண்டலுக்கு எதிராகவும் பாட்டாளி மக்களின் விடுதலைக்குச் சார்பாகவும் கம்யூனிச அறிக்கை வெளிவந்த

பின்னர் உலகந் தழுவி சமதர்மக் கருத்துக்களை உள்ளடக்கிய கலை இலக்கியங்கள் பல்பரிமாணங்களில் பல்கிப் பெருகியதனைக் காண்கின்றோம். இதேபோல் தென்னாசியப் பிராந்தியத்தில் பார்ப்பனீயத்தின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் நோக்குடன் இதிகாச புராணக் கதையாடல்கள் வெவ்வேறு கலை இலக்கிய வடிவங்களில் தென்னாசியாவெங்கும் பல்பரிமாணங்களில் பரவலாக்கப்பட்டமையினையும் விளங்கிக்கொள்ள முடிகின்றது. இதுபோல் எண்ணற்ற வகை வகையான உதாரணங்களை கலையிலக்கிய வரலாறு நெடுகிலும் காணலாம். இதில் அவதானிக்கத்தக்க விடயம் ஆதிக்க நோக்கிலும், ஆதிக்கத்திற்கு எதிரான நோக்கிலும் உலகந்தழுவி கலை இலக்கியங்களின் பேசு பொருள்கள் எடுத்தாளப்பட்டிருப்பதாகும்.

இத்தகைய உலகளாவிய கலை இலக்கிய மரபுகளின் பின்புலத்தில் இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டில் கலைச்செயல்வாதம் எனும் நடவடிக்கை மேற்கிளம்பி முக்கியத்துவமடைந்து வருவதனைக் காண்கின்றோம். ஆக்கபூர்வமான மாற்றங்களுக்கான வாழ்வியலை முன்னெடுப்போர் அதனைச் சாத்தியமாக்குவதற்கான வழிமுறைகளுள் ஒன்றாகக் கலையாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே இந்தக் கலைச் செயல்வாதத்தின் அடிப்படை நோக்கமாக இருந்து வருகின்றது. இதில் ஆதிக்கத்தை எதிர்த்தல், சுதந்திரம், சமத்துவம், சமூகநியாயம் முதலானவற்றை நிலைநிறுத்துதல் என்பன பிரதான விடயங்களாக விளங்கி வருகின்றன. இந்தக் கலைச் செயல்வாதங்களின் முன்னெடுப்பிற்கான அடித்தளத்தைப் பெண்ணிலைவாதச் செயற்பாடுகள் ஏற்படுத்தியுள்ளமையினை ஆய்ந்தறிய முடிகின்றது.

பால்நிலைச் சமத்துவத்தைக் குடும்ப அமைப்பிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் பெண்ணிலைவாத கலையாக்க நடவடிக்கைகளில் உலகந்தழுவி முற்போக்கான விடயங்கள் எடுத்துங் கொடுத்தும் கலை இலக்கியங்களில் பரவலாக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் ஈழத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் பெண்ணிலைவாதக் கலையிலக்கிய முன்னெடுப்புக்களுள் ஒன்றாகவே நாட்டிற்கு மழையைக் கொணர்ந்த சிறுமியின் கதையைக் கூறும் கன்னட மொழித் திரைப்படம் சிறுவர் கதையாகவும் சிறுவர் கூத்தாகவும் பாடசாலை நாடகமாகவும் பல்பரிமாணங்களில் படைப்பாக்கம் பெற்று பரவலாகி வருகின்றது.

குறுந் திரைப்படத்தின் கதை

ஒரு ஊரிலே நீண்ட நாட்களாக மழை கிடைக்காதிருக்கின்றது. மக்கள் வரட்சியால் வாடுகின்றார்கள் இந்நிலையில் மழையைக் கிடைக்கச் செய்ய வேண்டுமாயின் ஊரின் எல்லையிலே வாழும் அரக்கன் கவர்ந்து வைத்துள்ள மழைப்பழத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அரக்கனிடமிருந்து மழைப்பழத்தைப்

பெறுவதற்கு முன்னர் அரக்கன் கேட்கும் புதிர்களுக்கு விடையளிக்க வேண்டும். ஊரின் ஆட்சியாளர், குடிமக்களில் யாராவது அரக்கனிடம் சென்று மழைப்பழத்தைப் பெற்று வருமாறும் அவ்வாறு பெற்று வந்தால் அரச சொத்தில் பாதியை பரிசாக வழங்குவதாகவும் பகிரங்க அறிவிப்பு விடுக்கின்றார். சிலர் இதில் முயன்று அரக்கன் கேட்கும் புதிர்களுக்குச் சரியாக விடையளிக்காமையால் அரக்கனால் சபிக்கப்பட்டு கல்லாக மாற்றப்பட்டு விடுகின்றனர். இந்நிலையில் ஊரின் சிறிய கிராமத்தில் தாய்க்கு உதவியாக வாழும் சிறுமியான கிரிஜா இதற்காக முயலுகின்றாள். இவளுடைய முயற்சியை பெண் பிள்ளையாதலால் சாத்தியமாகாது எனப் பலரும் உதாசீனம் செய்கின்றார்கள். ஆனாலும் கிரிஜா தாயின் ஆதரவுடன் அரக்கனைச் சந்திக்கின்றாள் அரக்கன் கேட்ட புதிர்களுக்குச் சரியாக விடையளிக்கிறாள் மழைப்பழத்தைப் பெற்று விடுகிறாள். குறித்த பழத்தை கிரிஜாவின் சகோதரனே பெற்று வந்ததாக அறிவிக்கப்பட்டு மழைப்பழத்தை நடும் காரியம் இடம்பெறுகின்றது. ஆனால் மழை கிடைக்கவில்லை அப்போது இதில் தவறு ஒன்று இடம்பெற்றுள்ளதாக அறிய வருகின்றது. அதன் பின்னரே மழைப்பழத்தைப் பெற்றுக் கொண்டவள் கிரிஜா எனும் சிறுமி என்ற உண்மை ஊருக்குத் தெரிய வருகின்றது. கிரிஜா தனது கையால் மழைப்பழத்தை நடுகின்றாள். மழை பொழிகின்றது ஊரவர் மகிழ்கின்றார்கள். பாதி இராச்சியம் கிரிஜாவிற்குப் பரிசாக வழங்கப்படுகின்றது.

மேற்படி கதையினை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்ட கன்னட மொழித்திரைப்படம் ஈழத்தில் பெண்ணிலைவாத களப்பயிற்சிகளின் போது காட்சிப்படுத்தப்பட்டு அது பற்றிய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இக்களப்பயிற்சிகளில் இலகுபடுத்துனராகச் செயலாற்றிய ஈழத்தின் நாடகச் செயற்பாட்டாளரான சி. ஜெயசங்கர் அவர்கள் இத்திரைப்படத்தின் கதையினை ஒரு சிறுவர் கதையாகத் தமிழுக்கு மாற்றி எழுதும் நடவடிக்கையினை மேற்கொண்டார். இலங்கையின் மட்டக்களப்பில் கலைச்செயல்வாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழுவின் வெளியீடாக இக்கதை தமிழில் நூலாக 2005 ஆம் ஆண்டு முதலில் வெளியிடப்பட்டது. இந்நூல் சிறுவர்கள் வாசித்து ஆழமாக உணர்ந்து கொள்ளும் விதத்தில் ஓவியர் சு. நிர்மலவாசனின் ஓவியங்களுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மூன்றாவதுகண் நண்பர்களின் கலையாக்கச் செயற்பாடுகளின் போது காட்சி மற்றும் பகிர்தல் ஊடாக இச்சிறுவர் கதை பரவலாக்கஞ் செய்யப்பட்டு வருகின்றமை கவனத்திற்குரியது. விசேடமாக சிறுவர்களுடனான மூன்றாவதுகண் நண்பர்களின் கலையாக்க நடவடிக்கைகளில் இந்நூல் வாசிப்பிற்கும் ஆற்றுகைகளுக்கும்; உட்படுத்தப்பட்டு வருகின்றமை மனங்கொள்ளத்தக்கது. இதனைப் பின்வரும் மேற்கோள் மேலும் உறுதிப்படுத்துகின்றது. கிரிஜா குறுங்கதை சிறுவர்களுக்கான

விளையாட்டாகவும், நாடகமாகவும் மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டும் வந்துள்ளது. (சுலக்சனா, இரா)

சிறுவர் விளையாட்டாகிய விதம்

இலங்கையின் கிழக்கிலே குறிப்பாக மட்டக்களப்பிலே மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழுவினர் சிறுவர்களுடனான கலையாக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள். இதில் உள்ளூர் சிறுவர் விளையாட்டுக்களையும், அரங்க விளையாட்டுக்களையும் பிரயோகித்தல் பிரதானமாக இருந்து வருகின்றது. சிறுவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை ஆக்கபூர்வமான வகையில் விருத்தியுறச் செய்வதற்கு விளையாட்டுக்கள் காத்திரமான பங்களிப்பை வழங்கவல்லன. உள்ளூர் விளையாட்டுக்களில் காணப்படும் பால்நிலைப் பாராபட்சமான சிந்தனைகளை அகற்றி அவ்விளையாட்டுக்களை மீளுருவாக்கஞ் செய்து பிரயோகித்தல் இதில் பிரதானம் பெறுகின்றது. இந்த வகையில் சிறுவர்களிடையே பால்நிலை ஏற்றத்தாழ்வை வேரூன்ற விடாது அனைவரும் சமம் எனும் எண்ணத்தை சிறு வயதிலிருந்தே ஆழமாக வேரூன்றச் செய்யும் நோக்குடன் பால்நிலைச் சமத்துவத்தை வலியுறுத்தும் சிறுவர் கதைகளை விளையாட்டாகச் செய்வதற்குரிய வழிப்படுத்துதல்கள் இதில் முக்கியமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கதைகளை விளையாடும் போது சிறுவர்கள் சுதந்திரமாக இயங்குவதை அவதானிக்க முடிகிறது. இந்த வகையில் சிறுவர்கள் விளையாடுவதற்கான மிகப்பொருத்தமான கதையாக கிரிஜா விளங்குவதால் மூன்றாவதுகண் நண்பர்களின் சிறுவர்களுடனான கலையாக்கச் செயற்பாடுகளில் கிரிஜா கதையை விளையாடுதல் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. இக்கதை சிறுவர்களின் உளவியலுடன் பொருந்திப் போவதால் விரைவாகவும், இலகுவாகவும் சிறுவர்களால் கிரகிக்கப்பட்டு ஆக்கபூர்வமாக விளையாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர் கூத்தாகிய விதம்

ஈழத்துத் தமிழ் கூத்தரங்க வரலாற்றில் சிறுவருக்கான கூத்தரங்க முன்னெடுப்பானது கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டின் ஓரம்சமாக மேற்கிளம்பி பரவலாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 'கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டின் தொடர்ச்சியாக, பாரம்பரிய சூழலில் சிறுவர்களின் நிலைப்பாடு தொடர்பாக சிந்திக்கப்பட்டதன் விளைவாக, சிறுவர் கூத்தரங்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன' (சுலக்சனா, இரா, 2021). கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வினை முன்னெடுத்த சி. ஜெயசங்கர் அவர்களின் எண்ணக்கரு விளக்கத்துடன் சிறுவர்களுக்கான கூத்தரங்க நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன.

சிறுவர்களுக்கான கூத்தரங்கு என்ற எண்ணக்கருவானது செயல்வடிவம் பெற்றபோது அதில் முக்கியமான கதையாக கிரிஜா எடுத்தாளப்பட்டுள்ளது. மட்டக்களப்பிலே கூத்து எழுதும் கலைஞர்களான பழுகாமத்தைச் சேர்ந்த கவிஞர் க. தணிகாசலம் அவர்களிடமும், சீலாமுனையைச் சேர்ந்த செ. சிவநாயகம் அவர்களிடமும் சிறுவர்களுக்கான கூத்து பற்றிய உரையாடலுடன் கிரிஜா கதை வழங்கப்பட்டு சிறுவர் கூத்துக்களாக ஆக்கித் தருமாறு கேட்கப்பட்டிருந்தது. இதன்படி திரு க. தணிகாசலம் அவர்கள் 'சாதனை படைத்த சிறுமி' எனும் யெரிலும், செ. சிவநாயகம் அவர்கள் 'மழைப்பழம்' என்ற பெயரிலும் சிறுவர்களுக்கான கூத்துப்பனுவல்களாக உருவாக்கஞ் செய்தனர். கட்டிளமைப் பருவத்துச் சிறுவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் விளங்கி ஆற்றுகை செய்யும் கூத்துப் பனுவல்களாக மேற்படி இரு கூத்துக்களும் ஆக்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது.

இதில் மழைப்பழம் எனும் சிறுவர் கூத்தானது இலங்கையின் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் நுண்கலைகளைக் கற்கும் மாணவர்களும், உள்ளூர்க் கலைஞர்களும் இணைந்து பங்குபற்றி உருவாக்கிய கூத்தாற்றுகைத் தயாரிப்பு நடவடிக்கைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகப் பயிலப்பட்டு 2012 ஆம் ஆண்டு ஆற்றுகை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைப் பின்வரும் குறிப்பு எடுத்துக்காட்டி நிற்கின்றது.

கலாநிதி சி. ஜெயசங்கர் அவர்களினால் தமிழில் மொழிபெயர்த்து எழுதப்பட்ட 'கிரிஜா' எனும் கதையினை அடிப்படையாகக் கொண்டது. சீலாமுனைக் கிராமத்தைச் சேர்ந்த கூத்துப் பனுவல் எழுத்தாளர் திரு செ. சிவநாயகம் அவர்களால் 'மழைப்பழம்' எனும் பெயரில் கூத்துப் பிரதியாக எழுதப்பட்டது. இதனை சீலாமுனைக் கிராமத்தைச் சேர்ந்த் திரு சி. ஞானசேகரம் அண்ணாவியாரால் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் 2 ஆம் வருட சிறப்புக் கற்கை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்டது. இவர்களுடன் இணைந்து மூன்றாவதுகண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக்குழு நண்பர்களும் பங்குகொண்டு மாமாங்கேஸ்வரர் ஆலயத் திருவிழாச் சூழலில் 2012 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. (துலக்சனா.தி, 2012)

இதேவேளை இக்கூத்தானது சிறுவர்களுடனான கூத்தரங்க ஆய்வுச் செயற்பாடாக மட்டக்களப்பு சித்தாண்டி எனும் ஊரிலும், யாழ்ப்பாணம் சுதுமலையிலும் ஆய்வு மாணவர்களினால் செயல்மைய ஆய்வுகளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது. இதனைப் பின்வரும் செய்திக் குறிப்புக்கள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

மழைப்பழம் எனும் சிறுவர் கூத்தினை எனது இறுதியாண்டு ஆய்வுக்கட்டுரைக்காக சித்தாண்டி - 3 இல் வசிக்கின்ற சிறுவர்களை ஒன்றிணைத்து

அண்ணாவியார் வே. தம்பிமுத்து அவர்களின் உதவியுடன் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. இக்கூத்தாற்றுகையின் சட்டம் கொடுத்தல் நிகழ்வானது சித்தாண்டி வைத்தியர் வீதியிலுள்ள ஆற்றங்கரைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள இல்லத்தில் 12.07.2014 சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது. (துலக்சனா. தி 2014) கிழக்கு பல்கலைக்கழக இறுதி வருட மாணவன் இ. கங்கைகோபாலனின் ஆய்வு செயற்பாடாக 16.09.2015ம் திகதி அன்று யாழ் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றலில் மழைப்பழம் சிறுவர் கூத்து அரங்கேற்றம் கண்டது.

மேற்படி மழைப்பழம் சிறுவர் கூத்து ஆற்றுகை செய்யப்பட்டு வந்த பின்புலத்தில் 2020 களில் இக்கதை மேலும் உரையாடலுக்குட்படுத்தப்பட்டு புதிய வியாக்கியானங்களுடன் மீளுருவாக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது இக்கதையில் வரும் அரக்கன் பாத்திரத்தின் சித்திரிப்புத் தொடர்பாக மேலும் உரையாடல்கள் நிகழ்த்தப்பட்டன. தென்னாசிய சமூகங்களின் பண்பாடுகளில் மிகப்பெரும்பாலும் அரக்கன் அல்லது அசுரன் எனும் கதையாடலானது பார்ப்பனீய ஆதிக்கத்திற்குட்பட்டு கட்டமைக்கப்பட்டிருப்பது பற்றி நிறையவே உரையாடப்பட்டது. 'மூர்க்கத்தனமான காட்டுமிராண்டி மக்களான ஆரியர்கள் இந்தியாவில் படையெடுத்தபோது பதிலுக்கு அவர்களைத் தாக்கியவர்களை அசுரர்கள் என்று அழைத்தனர்', 'எவரெல்லாம் பார்ப்பனரில்லையோ, எவரெல்லாம் பார்ப்பனியத்தை எதிர்க்கிறார்களோ அவர்களெல்லாம் அசுரர், பழங்குடியினர்'; (கொற்றவை, 2010) என்ற ஆய்வாளர்தம் கருத்திற்கிணங்க ஏற்கெனவே மழைப்பழம் கூத்தில் வரும் அரக்கனை எதிர்மறைத் தன்மையிலிருந்து விடுவித்து ஆக்கபூர்வமான காரியத்திற்காகச் செயலாற்றிய பாத்திரமாகச் சித்திரிக்க வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன்படி நாட்டிற்கு மழையைக் கொடுக்கும் மரங்களையும் காடுகளையும் மனிதர்கள் வகை தொகையின்றி சுயநலத்தை மாத்திரமே கருத்திற் கொண்டு அழித்தமையால் எல்லா உயிர்களதும் வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட நிலையில் அதனைத் தடுத்து மனிதர்களுக்குப் பாடம் புகட்டும் நோக்குடன் மழைப்பழத்தைக் கவர்ந்து வைத்துள்ள ஒரு பாத்திரமாக மழைப்பழம் கூத்தில் வரும் அரக்கன் பாத்திரம் மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதாவது அழித்தொழிக்கும் ஆபத்தான கொடூர குணங்குறிகள் கொண்ட எதிர்மறையான பாத்திரமாகவன்றி மாறாக நாட்டின் நன்மைக்காக மக்களின் நன்மைக்காக, ஏனைய உயிர்களின் நன்மைக்காக, இயற்கைச் சூழலின் சமநிலையைப் பாதுகாப்பதற்காக சிந்தித்துச் செயலாற்றும் ஓர் ஆக்கபூர்வமான பாத்திரமாக தற்போதைய மழைப்பழம் சிறுவர் கூத்தில் வரும் அரக்கன் சித்திரிக்கப்பட்டுள்ளான்.

மேடை நாடகமாகிய விதம்

கிரிஜா சிறுவர் கதை கூத்தாக பரிமாணம் பெற்ற அதேவேளை அது ஒரு மேடை நாடகமாகவும் உருவாகி ஆற்றுகை செய்யப் பெற்றுள்ளது. அதாவது இலங்கையின் பாடசாலைக் கல்வித்துறையிலே கணித எண்ணக்கருக்களை நாடக ஆற்றுகைகளுடாக மாணவர்களிடையே பரவலாக்கஞ் செய்யும் வேலைத்திட்டத்தினூடாக மட்டக்களப்பு வாழைச்சேனை கறுவாக்கேணி விக்னேஸ்வரா கல்லூரியில் 2015 ஆம் வருடம் இக்கதை நாடகமாக ஆக்கப்பெற்றது. அதாவது குறித்த கதையில் அரக்கன் பூதமாகச் சித்திரிக்கப்பட்டு அது கேட்கும் புதிர்கள் கணித எண்ணக்கருவாக மாற்றப்பட்டு மேடை நாடகத்திற்கான எழுத்துருவாக இது ஆக்கப்பட்டிருந்தது. தளவுருப்பூதா எனும் மேடை நாடகமாக இக்கதை தழுவலாக்கம் பெற்று ஆக்கப்பட்டு மேடையேற்றப்பட்டிருந்தது. குறித்த நாடக உருவாக்கமானது கிரிஜா கதையை மாணவர்களுடன் உரையாடி அதனை எவ்வாறு கணிதப் புதிரோடு சம்பந்தப்படுத்தலாம் எனக்கேட்டு புதிதளித்தல்களை உருவாக்கிச் செய்து பார்த்த களப்பயிற்சி ஊடாகவே இந்நாடகம் உருவாக்கப்பட்டிருந்தது. நாடகப்பனுவல் நாடகப்பாட ஆசிரியராகக் கடமையாற்றிய து. கௌரீஸ்வரன் அவர்களால் ஆக்கப்பட்டிருந்தது.

முடிவுரை

மேற்படி விபரிப்புக்களுடாக கன்னட மொழியில் வெளிவந்த மழையைப் பெறுவதற்காக முயன்று போராடி வெற்றி கண்ட சிறுமியின் கதையினைக் கூறும் குறுந்திரைப்படம் எவ்வாறு தமிழ்ச் சூழலில் கவனிப்பிற்குரிய சிறுவர் கலையாக்கமாகப் பல்பரிமாணங்களைப் பெற்றுள்ளது என்பதை வெளிப்படுத்த முடிகின்றது. இன்றைய வணிகப் பண்பாட்டுச் சூழலில் சிறுவர்களுக்கான படைப்பாக்கங்கள் வணிகத்துடனும் ஆதிக்கப் பண்பாடுகளின் செல்வாக்குகளுடனும் பின்னிப்பிணைந்துள்ள பின்புலத்தில் ஒரு பண்பாட்டில் ஊற்றெடுத்த, பால்நிலைப் பாராபட்சங்களை மறுதலித்து சிறுவயதிலிருந்தே பால்நிலைச் சமத்துவத்தை வேரூன்ற வைக்கும் ஆக்கபூர்வமான கலையாக்கம் அதன் ஆக்கபூர்வமான கருத்துச் செறிவு காரணமாக எவ்வாறு இன்னுமொரு பண்பாட்டில் பல்வேறு படைப்பாக்கங்களுக்கான ஆதாரமாக இருந்துள்ளது என்பதையும் அடையாளங் காட்ட முடிகின்றது. இத்தோடு பெண்கள் தாம் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களையும் வன்முறைத் தன்மையினின்று விலகி ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளும் தன்மையினையும், மரங்களை அழிப்பதற்கு எதிராக ஆட்சியாளர்களையும், பொது மக்களையும் விழிப்பூட்டி வழிப்படுத்தும் பாத்திரமாக அரக்கன் பாத்திரம் இக்கதையின் பல்பரிமாணமூடாக வளர்ச்சியடைந்துள்ள விதத்தையும் எடுத்துக் காட்ட முடிகின்றது.

துணைநூற்பட்டியல்

1. https://www.oodaru.com/?p=7749
2. http://globaltamilnews.net/2021/164294/
3. http://www.arayampathy.lk/muthusom/668-%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%81%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88
4. http://www.battinews.com/2014/08/blog-post_81.html
5. http://karuvanam.blogspot.com/2010/10/blog-post.html
6. கிரிஜா சிறுவர் கதை, மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு, மட்டக்களப்பு 2012

REFERENCES

1. https://www.oodaru.com/?p=7749
2. http://globaltamilnews.net/2021/164294/
3. http://www.arayampathy.lk/muthusom/668-%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%81%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88
4. http://www.battinews.com/2014/08/blog-post_81.html
5. http://karuvanam.blogspot.com/2010/10/blog-post.html